**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தம்பர் 29 ஆந் திகதிய 5788-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பகுதி II, பீ(3) மற்றும் 4.09(பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

-----------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சொத்து முகாமைக்கான வீதி அபிவிருத்தி அதிகர சபையின் திறனை அதிகரித்தல் மற்றும் பைலட் முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்த முறைமையை (OPBRC) பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக பேகலியகொடவிலிருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் ஜா-எல – சிலாபம் வரையான வீதித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோலாகும். கடன் உடன்படிக்கை இல-5788 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் எஸ்டிஆர் 90.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியனானதுடன் மொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சபையினால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும், 2018 ஒகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்பகட்ட வேலைப்பரப்பு மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனுக்குச் சமமான 100 மில்லியன் அமெரிக்க டொலர் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு அனைத்து மாகாண விதிகளின் மேம்படுகளிற்காக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் மற்றும் விழையாட்டு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள மீதியில், ரூபா 2,320 மில்லியனுக்குச் சமமான 16 மில்லியன் அமெரிக்க டொலர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,232.5 மில்லியனுக்குச் சமமான 8.5 மில்லியன் அமெரிக்க டொலர் வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் மொத்த கடன் ஒதுக்கீடு 2020 மே 06 இல் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம் கோவிட் 19 பொறுப்பிற்கு ஐ.அ.டொலர் 7 மில்லியன் மற்றப்பட்டதன் காரணமாக ரூபா 1,305 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன்

வரை மீண்டும் குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜூன் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஒகஸ்ட் 15 இல் மீள் கட்டமைக்கப்பட்டு 2023 ஜூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

-----------------

செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரிய-தாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.** **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1** **சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதிய சட்டம் இல.1958 இன் பிரிவு 10. | ஊழியர் சேமலாப நிதியத்தின் சாதாரண பங்களிப்பு ஊழியரிடமிருந்து 8 சதவீதமாகவும் தொழில் வழங்குனரிடமிருந்து 12 சதவீதமாகவும் இருந்தும், செயற்திட்டமானது ஊழியர்களிடமிருந்து 10 சதவீதத்தினையும் தொழில் வழங்குனர்களிடமிருந்து 12 சதவீதத்தினையும் அனுமதித்திருந்தமை ஊழியர் சேமலாப நிதியச்சட்ட இல.1958 இற்கு முறனாக காணப்பட்டது. | தற்போது, ஈபிஎப் பங்களிப்பினை ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் கூறப்பட்ட படி அடுத்தமாதத்தில் கணக்கில் இடுவதற்கு நாங்கள் செயன்முறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். | ஊழியர் சேமலாப நிதியச்சட்டம் இல.1958 உடன் உடன்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.** **பௌதீக முன்னேற்றம்**

**3.1** **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| விடயங்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (1) சொத்து முகாமைத்துவம் மற்றும் அலகு ரீதியான திரன்மேன்பாடு போன்றவற்றை செயல்படுத்தல். | 48.47 | 39.4 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 9.07% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை காரணமாக. |

| | | | | |
|---|---|---|---|---|
| (2) திறன் கட்டியெழுப்பல், பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கள், வீதி பாதுகாப்பு. | 18.00 | 9.35 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 8.65% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை காரணமாக. |
| (3) உபகரணங்கள். | 5.92 | 5.03 | நடவடிக்கையின் பௌதீக செயலாற்றல் 0.89% இனால் இலக்கிற்கு பின்னால் காணப்பட்டது. | கோவீட் பரவரல் நிலை காரணமாக. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கு 72.39 சதவீதமாகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பெற்றது 53.78 சதவீதமாகும். செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிட்டத்திலிருந்து 18.61 சதவீதம் பின்னாக காணப்பட்டது.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்**

உள்ளீடுகளின் பொதுவிலைமட்ட அதிகரிப்பு காரணமாக செயற்திட்ட கிரயங்கள் அதிகரிப்பதனை தவிர்கவும் செயற்திட்ட செயலாற்றலை அதிகரிக்கவும் செயற்திட்ட எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை துரிதமாக அடைந்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**3.2 பயன்படுத்தப்படாத/குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,305 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன் உலகவங்கி கடன் வசதிகளில், மொத்த கடன் வசதிகளில் 16 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 266 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.41 மில்லியன் மாத்திரமே 4 வருடங்களும் 3 மாதங்களும் கடந்ததன் பின்னர் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுபெறாக ஐ.அ.டொலர் 7.59 மில்லியன் பெறுமதியான மிகுதியில் பாரிய பங்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | செயற்திட்ட வேலைப்பரப்பு மாற்றம் காரணமாக, 2021 திசெம்பர் 31 முடிவில் பயன்படுத்தப்பட்ட உண்மைத் தொகை ரூபா 266.19 மில்லியனாக மாத்திரமே இருந்தது, இது ஐ.அ.டொலர் 1.414 மில்லியனிற்கு சமனாக இருந்தது. கடனானது இரண்டு கடினமான வருடங்களான 2020 மற்றும் 2021 அனுபவித்ததன் பின்னர் அத்திகதியில் உள்ளவாறு செலவுசெய்யப்படாமல் காணப்படுகின்றது. | மிகுதி நடவடிக்கைகளை அடையாளப்படுத்தவும் 2023 மார்ச் 31 இல் கடன் வசதிகள் காலாவதியாவதற்கு முன்னர் பூர்த்தி செய்ய நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அலுவலக வாடகை கிரயம் ரூபா 58 78000 2020 ஆம் ஆண்டு வரை காலநிலை பினனடைவு முன்னேற்ற செயற்திட்டம் (CRIP) மற்றும் போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் (TCAMP) என்பனவற்றினால் சமமாக பிரிக்கப்பட்டிருந்தது. காலநிலை பின்னடைவு செயற்திட்டமானது 2021 ஜூன் 30 இல் கட்டிடத்திலிருந்து காழிசெய்திருந்தும், ஒட்டுமொத்த வாடகையும் வாடகைக்கான கிரயத்தினையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் டீசீஏஎம் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்ட விபரங்களுடன் உடன்பட்டனர். | மேலதிக இடைவெளியை உரிமையாளரிடம் கையளிக்கவும் அதன்படி வாடகையினை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிக்கான பெறுகை திட்டத்தின் பிரகாரம், கூட்டு மொத்தம் ரூபா 1,371 மில்லியன் பெறுமதியான 10 எண்ணிக்கைகளான பெறுகை நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 430 மில்லியன் பெறுமதியான 5 பெறுகை நடவடிக்கைகள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பெறுகை திட்டங்களின் கூட்டு மொத்தம் ரூபா 941 மில்லியன் பெறுமதியான 05 நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 பெறுகை திட்டத்தின் பிரகாரம், ரூபா 1,371 மில்லியன் தொகையான 10 நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தது. கையளிக்கப்பட்ட அல்லது பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதி ரூபா 430 மில்லியன் ஆகும். | தாமதமான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைப்பரப்பினை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்

| வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டவை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவறு உண்மை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| பெறுகை நிபுனர். | 01 | - | 01 | காணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்ட விபரங்களுடன் உடன்பட்டனர். 6 வெற்றிடங்கள் கொவிட் பரவலால் ஆன தவிர்க்க முடியாத நிலமைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளினால்ஆன ஏற்றுக்கொள்ள முடியாத நியமனங்கள் காரணமாக 2021 முடிவில் நிரப்பப்பட்டிருந்தது. | தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கவும் பட்டியலிடப்பட்ட திகதிகளில் செயற்திட்ட வேலைப்பரப்பினை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| பொறியியலாளர்கள் பீஎஸ்-4. | 02 | - | 02 | | |
| ஜீஐடி ஆய்வாளர். | 01 | - | 01 | | |
| புகைப்பட ஆய்வாளர் | 09 | 09 | 01 | | |